# உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு

## திருப்பலி முன்னுரை

அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா நல்வாழ்த்துக்கள்.

உயிர்ப்பு உன்னதமானது. ஆண்டவர் உயிர்த்தார் என்பதனால் தான் நம்முடைய விசுவாசம் உறுதிப் பெறுகின்றது. உயிர்ப்பிலே நம்பிக்கை கொண்ட மக்கள் நாம், அந்த நம்பிக்கை தருகின்ற வாழ்வினை சாட்சியாக்கி, நம் வாழ்வின் வழி, எல்லா ஆன்மாக்களையும் அவர் பாதத்தில் கொண்டு வந்து சேர்க்க, உறுதிபூண்டவர்களாய் பலியிலே பங்கேற்போம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. உம்மோடு திருமுழுக்கிலே ஒன்றித்து, அதனை இன்று புதுப்பித்த நாங்கள், பெற்ற அருளுக்கேற்ற வாழ்க்கை நடத்திட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. உயிர்ப்பை கொண்டாடி மகிழுகின்ற நாங்கள் உயிர்ப்பு தரும் நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பினை உணர்ந்திட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. உம் மக்களாகிய நாங்கள், நம்பிக்கையின் நட்சத்திரங்களாக சுடர்விட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. திருஅவையின் தலைவர் பிரான்சிஸ், மற்றபிற எல்லா பொறுப்பாளர்களையும் ஆசீர்வதித்து அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. கலகங்கள், பேர்கள், வன்முறைகள் ஓய்ந்து உறவிலும், உண்மை அன்பிலும் நாங்கள் எல்லாரும் உயிர்க்க அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com